ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1862/15 - 2014 මැයි මස 16 වැනි සිකුරාදා - 2014.05.16

1862/15 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: 10/3/1/3/39.
காணி அமைகுறிப்பு இல.: LD /05/2007/HW/354.

வத்தேகம கந்தெனுவர-வாரியபொல பாதையில் இல. 25/9 பாலம் அமைக்க வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை பிரதேசசெயலாளர் பிரிவில் மாத்தளை உடசிய பத்துவ சிறுபிரிவில் கொபொல கிராமத்தில் அமைந்துள்ள மாத்தளை நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. மா 1609 இல் காட்டப்பட்டுள்ள, கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள்.

1. துண்டு இல. 1:
காணியின் பெயர்: கொடபொல வத்த; விபரம்: தோட்டம்/புதர்; உரிமை கோருபவர்: திரு. சமன் அழுவிஹாரே, இல. 27, பிரதான வீதி, மாத்தளை; விஸ்தீரணம்: 0.0147 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு, உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014, ஓகத்து 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இரத்தோட்டை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஓகத்து 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ.எம். ஜீ. பீ. விஜேபண்டார,
பிரதேச செயலாளர்,
இரத்தோட்டை.

பிரதேச செயலகம்,
இரத்தோட்டை,
2014, ஏப்பிறல் 21.

5 - 858

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.